**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 184/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 13.10.2025.**

| Name : ராஜ்குமார் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சேலம்கேம்பில் குடியிருந்து கெம்ப்ளாஸ்டில் வேலை செய்கிறேன். அனிதா அ.சா.1 யை எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தானா என்றால் ஆமாம், 1 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2)சேலம் கேம்பில் உள்ள கோபிநாத் என்பவர் ரவுடி அவரை தெரியுமா என்றால் தெரியாது. 12.09.2022 ம் தேதி காலை 10.50 மணியளவில் அ.சா.1 ன் சகோதரி செல்போனுக்கு அபிமன்யு என்பவர் செல்போனிலிருந்து அவரை மிரட்டியதாகவும், அவருடைய அண்ணன் லல்லுபிரசாத் ரவுடி என்று

சொல்லியதாகவும், 15.09.2022ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் அனிதாவின் தம்பி குழந்தைவேல் என்பவரும் கருமலைக்கூடல் நான்கு ரோடு அருகே இருந்த போது அ.சா.1 அவருடைய இரு சக்கர வாகனத்தில் நான்கு ரோடு அருகே வந்த போது அவர்களுக்கு எதிரே குருவி (எ) கிருஷ்ணமூர்த்தி இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாகவும், அவருக்கு பின்னால் அமர்ந்து வந்த அ.சா.1யை எட்டி உதைத்து கெட்ட வார்த்தையால் திட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) கடந்த 21.09.2022 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு அஜய் நகர் நான்கு ரோட்டில் நான் மற்றும் மாணிக்கம் (எ) வெள்ளையங்கிரி இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.